மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 28/73).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

'1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் சில சிறு திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டது. இதிலே 68-எச் என்ற செக்ஷன் சட்டமன்றத்தின் மூலம் ஏற்கனவே திருத்தமாகக் கொண்டுவரப் பட்டு இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தின் மூலம் வேறு ஒரு சட்டத் திருத்தம் 68-எச் என்று கொண்டுவந்து விட்ட காரணத்தினால் நம்முடைய திருத்தச் சட்டத்தை 68-எச் எச். என்று மாற்ற இந்த மசோதா வகை செய்கிறது.

(திரு. க. சுப்பு தலைமை.)

எஸ்.டி.ஏ.டி.-இல் இருந்து வழித்தடங்களில் ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அப்படி அப்பீல் செய்ய கட்டணத்தை விதிக்கின்ற திருத்தமும் இருக் கிறது. இவை இரண்டும் சாதாரண திருத்தங்கள் என்ற வகை யில் இவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

* 22—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.

1973 டிசம்பர் 1]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) பேரவைமுன்னுள்ள கேள்வி :

"1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு என் 28/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, "இச்சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73) ஆய்வக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

*27—11—1973 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.